# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
# Sabaragamuwa Provincial Department of Education

முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம்- 11
First Term Test - 2016 | Grade 11

வணிகமும் கணக்கீட்டு கல்வியும் பகுதி-I | ஒரு மணித்தியாலம்
Business & Accounting Studies Part-I | one hour

பெயர் சுட்டெண்:-…………………………………………………………………………..

அறிவுறுத்தல்:-

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**
**புள்ளிடத்தாளில் பொருத்தமான விடை எண்ணிற்கு புள்ளடி இடுக.**

1) விருப்பங்கள் மட்டும் உள்ளடக்கிய தொகுதி
   (1) உணவு உறைவிடம் போக்குவரத்து புத்தகம்
   (2) மாடிவீடு சப்பாத்து சுகாதாரம் உடை
   (3) கேக் சப்பாத்து புத்தகம் மாடிவீடு
   (4) உணவு உறையுள் சுகாதாரம்

2) பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி வணிகத்தை உள்ளடக்கிய தொகுதி
   (1) காப்புறுதி நிறுவனங்கள் சில்லறை வியாபாரம் தளபாட வியாபாரம் மோட்டார் உற்பத்தியாளர்
   (2) மொத்த விற்பனையாளர் வங்கிகள் தொலைப்பேசி உற்பத்தியாளர்கள் அடுப்பு உற்பத்தியாளர்
   (3) சிகை அலங்கார நிறுவனங்கள் காப்புறுதி கம்பனிகள் மொத்த விற்பனையாளர் வீட்டு பாவனை பொருள் உற்பத்தியாளர்
   (4) மொத்த விற்பனையாளர் காப்புறுதி கம்பனிகள் சிகை அலங்கார நிறுவனங்கள் கல்வி நிறுவனங்கள்

3) பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணி அல்லாதது
   (1) நிலம்   (2) முயற்சியாமை   (3) இயந்திரம்   (4) மூலதனம்

4) இலாப நோக்கமற்ற நிறுவன அமைப்பானது…
   (1) பங்குடமை ஆகும்   (3) அரச கம்பனி ஆகும்
   (2) கூட்டுறவு ஆகும்   (4) தனியுடமை ஆகும்

5) "சீபா…சன்" என்பது எவ்வகையான வணிகம்
   (1) தனியுடமை   (3) கூட்டுறவு
   (2) பங்குடமை   (4) விளையாட்டு கழகம்

6) தனியுடமை வணிகத்தை காட்டிலும் பங்குடமை வணிகத்தில் காணப்படும் விசேட பண்பு
   (1) தொடர்ந்து இயங்கும் தன்மை   2) நோக்கம்
   (3) பங்காளர் எண்ணிக்கை   (4) சட்ட ஆளுமை

7) நுகர்வோர் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட நிறுவனம்
   (1) நுகர்வோர் அதிகார சபை
   (2) நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்
   (3) மத்திய சுற்றாடல் அதிகார சபை
   (4) பிரதேச செயலகம்

8) பருமன் அடிப்படையில் வணிகத்தை வகைப்படுத்துவதற்கான அளவுகோள்

(1) திறமையான முகாமையாளர் ஆகும் (2) மூதலீடு

(3) ஊழியர் எண்ணிக்கை (4) பயன்படுத்தும் சக்தி

9) உலக ஆசிரியர் தினம் ஒரு விசேட தினமாகும் .இது எவ்வகையான வணிக சுழலில் உள்ளடங்கும்

(1) தொழிநுட்ப சூழல் (3) அரசியல் சூழல்

(2) பொருளாதார சூழல் (4) சமூக சூழல்

10) 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஒரு தனிநபரால் உருவாக்ககூடிய வணிக அமைப்பு

(1) தனியுடமை (3) தனியார் கம்பனி

(2) கூட்டுறவு (4) சங்கங்கள்

11) இறுதி நுகர்விற்காக பொருட்களை சேவைகளை விற்பனை செய்யும் நடவடிக்கை

(1) மொத்த வியாபாரம்

(2) இறக்குமதி வியாபாரம்

(3) சில்லறை வியாபாரம்


(4) ஏற்றுமதி வியாபாரம்

12) மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான பிரதான வேறுபாடு

(1) கொள்வனவாளர் நோக்கம் (2) விற்பனையாளர் நோக்கம்

(3) உற்பத்தியாளர் நோக்கம் (4) மேற்குறிப்பிட்ட மூன்று தரப்பினரினதும் நோக்கம்

13) பின்வருவனவற்றுள் சிறப்பு முறை குறுக்கு கோடிடல்




The National e-learning Portal for The General Education

14) மக்கள் வங்கியினால் விநியோகிக்கப்படும் ATM CARD வகையானது

(1)SET (2)CAT (3)BOC (4)PET

15) காப்புறுதி தத்துவம் அல்லாதது

(1) இழப்பீடு (2) உச்ச நம்பிக்கை (3) காப்புறுதி (4) காப்புறுதி செய்யதகு நலன்

16) தொடர்பாடல் முறைகளுள் ஒன்று

(1) கூட்டம் (2) வானொலி (3) பேச்சு (4) மின்னஞ்சல்

17) திட்டமிடல் ஒழுங்கமைத்தல் நெறிப்படுத்தல் கட்டுபடுத்தல் எனும் கருமங்கள்

(1) சந்தைப்படுத்தல் (3) முகாமைத்துவம்

(2) தொழிற்சாலையாகும் (4) போக்குவரத்தாகும்

18) சந்தைப்படுத்தல் கலவைகளில் ஒன்று அல்லாதது

(1) உற்பத்தி (2) உற்பத்தி செய்தல் (3) விலை (4) இடம்

19) அவசியமான வளங்களை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை தீர்மானிக்கும் செயற்பாடு

(1) திட்டமிடல் (3) ஒழுங்கமைத்தல்

(2) நெறிப்படுத்தல் (4) கட்டுபடுத்தல்

20) ‘‘கொழும்பு துறைமுக விரிவாக்கல்’’ எனும் கூற்றின் ஊடாக வெளிப்படுத்தும் போக்குவரத்து கூறு

(1) வீதி (2) வலு (3) முறை (4) தரிப்பிடம்

21) பொறுப்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி

(1) அலுவலக உபகரணம் .கடன்படுனர் கையிலுள்ள காசு
(2) அட்டுறு செலவு கடன்கொடுனர் வங்கி கடன்
(3) இயந்திரம் காணிகட்டிடம் மோட்டார் வாகனம்
(4) வங்கி கடன் கடன்கொடுனர் சரக்கிறுப்பு

22) வரவில் குறைவையும் செலவில் அதிகரிப்பையும் ஏற்படுத்தும் இரட்டைப்பதிவு தத்துவதிற்கு அமைவான 2 கணக்கு ஆவனங்கள்

(1) மூலதன கணக்கு- கடன்கொடுனர் கணக்கு
(2) வங்கி கணக்கும்- கடன்பட்டோர் கணக்கும்
(3) காப்புறுதி கணக்கும் வங்கிகடன் வட்டி கணக்கும்
(4) காகிதாதி கணக்கும் இயந்திர கணக்கும்

23) x பகுதியில் கணக்குகளுக்கான பேரேட்டு கணக்கும் Y பகுதியில் அவற்றுக்கான இரட்டை பதிவுகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1).மின்சார கணக்கு | A−சொத்துக்கள்- அதிகரிப்பு- செலவு<br>குறைவு- வரவு |
| 2). வங்கிகடன் | B−பொறுப்புகள் அதிகரிப்பு- வரவு<br>குறைவு- செலவு |
| | C−செலவுகள் அதிகரிப்பு- செலவு<br>குறைவு- வரவு |
| | D− செலவுகள்- அதிகரிப்பு- வரவு<br>குறைவு- செலவு |

மேற்குறிப்பிடப்பட்ட பேரேட்டு பதிவுக்கான பொருத்தமான இரட்டை பதிவு முறையே…..

(1)CA (2) CB (3) DA (4) DB

24) கீழ்வரும் கணகீட்டு சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் ஆனது

சொத்து = மூலதனம் + பொறுப்பு

+50000 +50000

(1) கடன் கொள்வனவு ரூபா 50000
(2) 50000 ரூபா கடன்கொடுனருக்கு செலுத்தப்படல்
(3) வங்கி கடனுக்காக 50000 ரூபா மீள செலுத்தப்படல்
(4) உரிமையாளர் ரூபா 50000 மூதலிடப்படல்

நிமால் வணிகத்தின் சில்லறை காசு மீள் நிரப்பல் ரூபா 2500 சில்லறை காசேட்டு மீதி 30.01.2015 ரூபா 250 ஆகும் அதே திகதி சில்லறை காசு மீள் நிரப்பபட்டுள்ளது எனின் 25.26 வினாக்களுக்கு விடை தருக

25) சில்லறை காசேட்டின் மீள்நிரப்பல் தொகை

(1) ரூபா 2500 (2) ரூபா 2250 (3) ரூபா 250 (4) ரூபா 2750

26) சில்லறை காசேட்டின் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யப்படும் மூல ஆவணம்

(1) பற்று சீட்டு (2) சில்லறை காசேட்டு வவுச்சர்

(3) வவுச்சர் (4) வரவு குறிப்பு

27) கீழ்வரும் கூற்றில் தரப்பட்டுள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொற்களாவன,

கடன் பட்டோர் பேரேட்டு கணக்கு ………………………..

கணக்காகவும் பெற்ற கழிவு கணக்கு ……………………… கணக்கு ஆகவும் பதியப்படும்

(1)பொறுப்பு, வருமானம் (2) பொறுப்பு, செலவு (3) சோத்தும் வருமானமும் (4) சொத்தும் செலவும்

28) பேரேட்டின் மாதிரி வருமாறு

| திகதி | விபரம் | பேரேட்டு இல | தொகை | திகதி | விபரம் | பேரேட்டு இல | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 14.12.01 | மீதி | | 5000 | 14.12.07 | அனுமதித்த கழிவு | | 500 |
| | விற்பனை | | 4500 | | காசு | | 3000 |
| | | | | 12.31 | மீதி கொ. செ | | 6000 |
| | 9500 | | | | | | 9500 |
| 15.01.01 | மீதி கொ. வரல் | | | | | | |

28) பின்வருவனவற்றுள் பொருத்தமான கணக்கும் பொருத்தமான கணக்கு வகையுமாவது,

(1) கடன் கொடுனர் கணக்கு பொறுப்பு (2) காசு கணக்கு சொத்து

(3) கடன்படடோர் கணக்கு சொத்து (4) கடன் பட்டோர் கணக்க பொறுப்பு

29) பின்வருவனவற்றில் அனுமதித்த கழிவில் ரூபா 800 அதிகரிப்பை ஏற்படுத்தல். கொடுக்கல் வாங்கலானது,

(1) கடன் கொடுனர் அமிலவிற்கு 10% கழிவில் ரூபா 10000 செலுத்தப்படல்

(2) 5000 பெறுமதியான பொருட்கள் ரூபா 4200 இற்கு வழங்கப்படல்

(3) ரூபா 6000 கடன் படுனரான கிகானிடமிருந்து ரூபா 5400 பெறப்படல்

(4) 8000 பெறுமதியான கடன் பட்டோன் ஆன கபில விடமிருந்து 10% கழிவு நீங்கி பணம் பெறல்

30) சரியான கூற்றினை தெரிவு செய்க

(1) அனைத்து கடன் கொள்வனவுகளும் கொள்வனவு நாளேட்டில் பதியப்படல்

(2) அலுவலக பாவனைக்காக வாங்கப்பட்ட இயந்திரம் பொது நாட்குறிப்பு ஏட்டில் பதியப்பட்டுள்ளது

(3) தளபாட விற்பனை செய்யும் நிறுவனம் கடன் கொள்வனவுகளை கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்துள்ளது.

(4) குறித்த மூலப்பதிவேட்டில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதியப்படுகின்றது.

31) ரூபா 45000 பெறுமதியான பொருள் கொள்வனவினை கதியப்படும் மூல ஆவணமும், மூல பதிவேடும்

(1) கொள்வனவு பட்டியலும் கொள்வனவு நாளேடும்

(2) கொடுப்பனவு கைச்சாத்தும் காசுப் புத்தகமும்

(3) பற்று சீட்டும் வங்கி கணக்கும்

(4) காசு கணக்கும், கொடுப்பனவு கைச்சாத்தும்

32) சில்லறைக் காசேட்டின் மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவானது முறையே,

(1) காசேடு – வரவு சில்லறை காசேடு செலவு

(2) உரிய செலவு கணக்கு வரவு சில்லறை காசேடு செலவு

(3) சில்லறை காசேடு வரவு காசேடு செலவு

(4) சில்லறை காசேடு வரவு உரிய செலவு கணக்கு செலவு

33) பின்வரும் காரணங்கள் வங்கி கூற்றுக்கும் காசேட்டு வங்கி மீதிக்கும் வேறுபாட்டினை ஏற்படுத்த ஏதுவான காரணி

(1) வங்கி அறவீடுகளும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளும்

(2) தீர்வையாகாத காசோலைகளும் மதிப்பிழந்த காசோலைகளும்

(3) நேரடி வைப்புக்களும் நிலையியற் கட்டளை பெயரிலான கொடுப்பனவும்

(4) வங்கி அறவீடுகளம் வங்கி மேலதிகப் பற்றும்

- கீழ்வரும் தகவல்களைக் கொண்டு 34, 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  கசுன் வியாபாரத்தின் 31.01.2016 ஆண்டிற்கான வங்கி கணக்கு தொடர்பான தரவுகள்
- ரூபா 15000 பெறுமதியான காசோலை வைப்பிலிடப்பட்டும் வசூலிக்கப்படவில்லை
- நேரடி வைப்புக்கள் ரூபா 25000
- நிலையான கட்டளைப் பெயரிலான கொடுப்பனவு ரூபா 3500
- ரூபா 10500 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை
- வுங்கி கட்டண அறவீடு ரூபா 750

34) செம்மையாக்கப்பட்ட வங்கி கணக்கின் மீதியானது,

(1) ரூபா 26500 ஆகும் (2) ரூபா 30750 ஆகும் (3) ரூபா 27250 ஆகும் (4) ரூபா 31500 ஆகும்

35) வங்கி கூற்றின் மீதியானது,

(1) ரூபா 22750 ஆகும் (2) ரூபா 27250 ஆகும்

(3) ரூபா 31750 ஆகும் (4) ரூபா 37750 ஆகும்

36) மூல ஆவணங்கள் மூல ஏடுகளுடன் முறையே பொருந்தும் விடை ஆவது,

| | |
|---|---|
| A வங்கி கணக்கு | E கொள்வனவு பட்டியல் |
| B காசேடு | F வைப்பு சீட்டு |
| C பொது நாளேடு | G பற்று சீட்டு |
| D விற்பனை நாளேடு | H நாளேடு கொடுப்பனவு கைச்சாத்து |

(1) EHGF (2) HEFG (3) GFEH (4) FGHE

37) நாளாந்த வேலைகளுக்காக சிங்கர் வரையறுக்கப்பட்ட கம்பனியிடமிருந்து கெபள்வனவு செய்யப்பட்ட ரூபா 50000 பெறுமதியான கணினி கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவு முறையே,

(1) கணினி கணக்கு வரவு

காசு கணக்கு செலவு

(2) கொள்வனவு கணக்கு வரவு

சிங்கர் கம்பனி கணக்கு செலவு

(3) கணினி கணக்க வரவு

சிங்கர் கம்பனி கணக்கு செலவு

(4) சிங்கர் கம்பனி கணக்கு வரவு

காசு கணக்கு செலவு

38) கைப்பேசிகளுடனான கொடுப்பனவு தீர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?

(1) 2013 (2) 2012 (3) 2014 (4) 2015

39) பரீட்சை மீதியின் வரவு செலவு மீதிகள் சமப்படுமாயின் ,

(1) கொடுக்கல் வாங்கல்களில் பதிவில் ஏற்பட்ட வழு காரணமாக

(2) எண்கணித ரீதியான செம்மையினால்

(3) கொடுக்கல் வாங்கல்கள் மூல ஏடுகளில் சரியாக பதியப் பட்டிருப்பதால்

(4) பேரேடுகளில் ஏற்பட்ட வழுக்களால்

40) அனுமதித்த கழிவு ரூபா 750 பெற்ற கணக்கில் செலவில் பதியப்பட்டுள்ளது. இவ்வழுவினை செம்மையாக்கப் பயன்படும் பதிவானது,

(1) அனுமதித்த கழிவு கணக்கு வரவு 750

பெற்ற கழிவு கணக்கு செலவு 750

(2) தொங்கல் கணக்கு வரவு 1500

பேற்ற கழிவு கணக்கு செலவு 1500

(3) அனுமதித்த கழிவு கணக்கு வரவு 750

பெற்ற கழிவு கணக்கு வரவு 750

தொங்கல் கணக்கு செலவு 1500

(4) தொங்கல் கணக்கு வரவு 1500

அனுமதித்த கழிவு கணக்கு வரவு 750

பெற்ற கழிவு கணக்கு செலவு 750